புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

=============================================================================

# அருந்ததியர்கள் வரலாறும், பண்பாடும்

முனைவர் ப.தேவராஜ்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி (தன்னாட்சி),
பொன்னேரி-601204.

=============================================================================

## முன்னுரை

சிலப்பதிகாரத்தில், இந்திரவிழவு ஊர் எடுத்த காதையில் 32-ஆம் வரியில், “தோலின் துன்னர்” என இளங்கோ அடிகள் கூறுவதற்கு, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரும்பத உரைகாரர் “தோலின் துன்னர்” என்பதற்கு “செம்மான்” எனப் பொருள் கூறுகிறார். 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அடியார்க்கு நல்லார் “தோலின் துன்னர்” என்பதற்கு “பறம்பர்” எனப் பொருள் கூறுகிறார். கடந்த நூற்றாண்டில் “பறம்பர்கள்” என்போர் சக்கிலியர்கள் என தேவநேயப்பாவாணர் கூறுகிறார். “சக்கிலியருக்கு வள்ளுவர் என்ற சிறப்புப் பெயர் உண்டு. சக்கிலியர்கள் தொன்மைத் தமிழர்கள்” என ஊரான் அடிகளார் கூறுகிறார். இவ்வாறு பல்வேறு அறிஞர்கள் குறிப்பிடப்படும் சக்கிலியர்களே அருந்ததியர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தமிழ்நாட்டில் பண்டை நாள் முதல் வாழ்ந்துவரும் தமிழ்ஆதிகுடிகள். பழைய கற்காலம், புதிய கற்காலம் போன்ற வரலாற்றுக் காலத்திற்கு முன்பு அனைத்து இனக்குழுவினரும் வேட்டைச் சமூகமாக வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு இனக்குழுவிற்கும் ஒரு தலைவன் இருந்தான். அந்த இனக்குழுத்தலைவனுக்கு நாம் சூட்டிய பெயர்தான் “அரசன்”. சிற்றரசன், குறுநில மன்னன், பேரரசன் இப்பெயர்கள் யாவும் இனக்குழுத் தலைவனைக் குறித்து வரும் பெயர்கள். நிலங்களை ஆக்கிரமிக்க நடக்கும் முயற்சியே போர் என புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. போரில் தோற்பவர்கள் ஏவல் பணி செய்யும் அடிமைகளாக, இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்டனர் என்பதைப் புறநானூறின் வழியே அறியலாம். தமிழ் நாட்டில் சேர,சோழ,பாண்டியப் பேரரசு என்பது 2500 ஆண்டுகள் பழமை கொண்ட அண்மைக்காலம். பல்வேறு இனக்குழுவினர்களால் பேசப்பட்டு வந்த தமிழ்மொழி அவர்களைத் தமிழர் என அடையாளப்படுத்தியது. “வட வேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில்” பழந்தமிழர்களாக வாழ்ந்து வரும் அருந்ததியர்களின் வரலாறும், பண்பாடும் குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

## பார்ப்பனியமும் வரலாற்றுத் திரிபுகளும்

ஆசிய கண்டத்தில் இந்தியா என்பது தனித்துவமான நாடாக பண்டைய நாளில் இல்லை. இந்தியாவின் பூர்வகுடிகள் திராவிடர்களே. சதுர்வர்ணக்கோட்பாட்டிற்கு அடிமைப்பட்டு, அறிவியலுக்குப் புறம்பான கட்டுக்கதைகள் கூறும் புராணக்கட்டுகளின்படி, தாங்கள் பிறந்ததாக அடையாளங்களை சொல்ல வைத்து அதுவே தங்களின் வரலாறு என இன்று வரையில் கூறிவருவது விந்தையிலும் விந்தை எனலாம். அனைத்து இனக்குடிகளும் ஒரு இனக்குழுவிலிருந்துதான் தோன்றியது.

## பழங்கால மனிதர்கள்

ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு கல்வெட்டுகள், செப்புப் பட்டையங்கள், தொல்பொருள் நினைவுச் சின்னங்கள், நாணயங்கள் ஆகியவை முதன்மை ஆதாரங்களாகவும், இலக்கியங்கள், கடிதங்கள், வெளிநாட்டினர் குறிப்புகள், நாட்டுப்புற கதைப் பாடல்கள்

போன்றவைகள் இரண்டாம் நிலை ஆதாரங்களாகவும் உள்ளன. ஒரு தொன்மைத் தாயிடமிருந்து தோன்றியவர்களே நாம் அனைவரும். ஆதி மனிதனின் வாழ்க்கையும் பிற விலங்குகளைப் போல காட்டில்தான் தொடங்கியது. மனிதனாக மாறிய சூழல் பத்து இலட்சம் ஆண்டுகள்தான். மரம், எழும்பு, கொம்பு ஆகியவற்றினால் ஆன கருவிகளைப் பயன்படுத்துதல், விலங்குகளின் தோல் ஆடைகளை அணிதல், நாடோடி வாழ்க்கை வாழ்ந்திருந்தல், மான், மாடு, ஆடு, முயல், பறவைகள், பன்றி, உடும்பு போன்றவற்றை வேட்டையாடி உண்ணுதல், கிழங்குகளைத் தோண்டி உண்ணுதல், கால்நடைகளைப் பழக்கி தமதாக்கிக்கொள்ளல், அம்மிக்கல், குத்திக்கல், குழவிக்கல் போன்றவைகளின் பயன்பாடுகள் ஆகியன பழைய மற்றும் புதிய கற்காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் பண்பாட்டுச்சூழல் எனலாம்.[1]

தட்பவெப்ப மாறுபாடுகளுக்கு ஏற்றாற்போல பல்வேறு இடங்களுக்குப் பெயர்ந்து செல்லுதல். வறட்சி, மழை, வெள்ளம் போன்ற பேரிடர்களால் இடப்பெயர்வுகளை நிகழ்த்துதல், வானத்திலிருந்து வந்ததாகக் கருதி ஏதோ ஒன்றை வணங்கி, மரங்களை-விலங்குகளை வணங்கி, மான்தோல், புலித்தோல், யானைத்தோல் போன்றவற்றைப் புனிதமாகக்கருதி வழிபடுதல் போன்ற பல்வேறு மாறுதலுக்குட்பட்டு வேட்டை மற்றும் அலை குடிகளாக இருந்த சமூகங்கள் நிலைத்த சமூகங்களாக(திராவிடர்) மாறினர்.

ஆரிய படையெடுப்பில் திராவிடர்களின் பண்பாடும், வரலாறும் வீழ்ச்சி அடைந்து பல மாறுதலுக்கு உட்பட்டது. இந்தியாவில் வாழ்ந்த அனைத்து மக்களும் சாதிக்குழுக்களாக மாற்றப்பட்டனர். எல்லைகளுக்கான போர்கள், வேளாண் உற்பத்தி, உணவு சேமித்தல், பஞ்சம், வறட்சி, ஒற்றைத்தலைமை, பெண்களைத் தமதாக்கிக்கொள்ள போர்கள், மூடநம்பிக்கைகள், நிலம், கால்நடைகளுக்கான போர்கள், பேசும் மொழி, வணங்கும் தெய்வம் போன்றவைகளுக்கான போர்கள் என திராவிடர்கள் மேலும் பிரிவுக்குள்ளானார்கள். அரசமுறை போர்களில் தோற்றவர்கள் அடிமைகளாகவும், ஏவல் பணி செய்பவர்களாகவும் மாறிப்போனார்கள். இன்னும் சிலர் ஒதுங்கியும், மறைந்தும் வாழ்ந்தனர். ஒரு சிலரை ஒதுக்கியும் வைத்தனர். சில இனக்குழுக்கள் தாங்களே விரும்பி பிற இனக்குழுவினர்களின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு ஏவல் பணியாளர்களாகவும் மாறிப்போனர். வீரர்கள், அரசர்கள், அமைச்சர்கள், வணிகர்கள், ஏவலர்கள், வேளாண் உற்பத்தியாளர்கள் போன்ற தொழில் அடிப்படையில் பார்ப்பனிய புராணக்கதைகளை நம்பி அவர்கள், தங்களைச் சாதிகளாக அறிவித்துக்கொண்டனர்.[2]

அருந்ததியர்களின் வரலாறு

''சக்கிலியர் என்போர் தோல் தொழில் செய்வோர். வேளாண்மைக்கு நீரிறைக்க தோற்பரை செய்வோர், செருப்புத் தைப்போர்''. சங்க இலக்கியங்கள் ''தொடுதோல் அடிபுதை அரணம்'' எனப் பதிவுசெய்கிறது. இவைகள் அனைத்தும் அருந்ததியர்கள் குறித்த சொல்லாடல்கள் ஆகும். ''அடிபுதை அரணம், சோதிடம் பார்ப்பது, அரச முறையில் முரசறைவது, பறையர்க்குப் புரோகிதம் செய்யும் வள்ளுவர் தொழில் ஆகியவை சக்கிலியர்களின் பணிகளாகும். சக்கிலியருக்கு வள்ளுவர் என்ற சிறப்புப் பெயர் உண்டு. சக்கிலியர்கள் என்போர் தொல்தமிழர்கள்''[3] என ஊரான் அடிகளார் (சாதியும் மதமும்-ஊரான் அடிகள், பக்கம்-61) கூறுகிறார். ''அரிபுர மாதியர் தேடிய நாதா, அரகர சிவசிவ ஆடிய பாதா…….'' -5072 என அருட்பாவில் வள்ளலார் ''மாதியர்'' என்போர் சிவனை வணங்குபவர்கள் என்கிறார்.

இத்தகைய வரலாற்றினைப் பெற்ற அருந்ததியர்கள் சாதியை ஏற்காத தொன்மைத்தமிழர்கள். தமிழ் மொழி மட்டும் பேசும் அருந்ததியர்கள், தமிழுடன் தெலுங்கு மொழி பேசும் அருந்ததியர்கள், தமிழுடன் கன்னடம் பேசும் அருந்ததியர்கள், தமிழ் மொழியுடன் மலையாளம் பேசும் அருந்ததியர்கள், நான்கு மொழிகளும் பேசும் அருந்ததியர்கள் என ஐந்து வகையான இனக்குழுக்கள் தமிழகம் முழுவதிலும் பரவி, அன்றும் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். தொழில் தொடர்பாக பிற மொழி பேசும் மக்களுடன் பேசிப்பழகியதாலும், பிற மொழி பேசுபவர்களுடன் தொழில் தொடர்பாக உதவியாக இருந்து, அவர்ளின் மொழியினை மிக சுலபமாகக் கற்றுகொண்டவர்கள். நால்வருணக் கொள்கையில் இவர்கள் ஒடுக்கப்பட்ட போது, இவர்கள் மிகவும் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக மாறிப்போனார்கள். ஆரியத்தின் ஒடுக்குமுறையினைக் கண்டு அஞ்சாதவர்கள். சாதித் தீட்டுகளைக் கண்டு கொள்ளாதவர்கள். மிகக்கீழான தூய்மைப்பணி செய்ய வற்புறுத்தப்பட்டவர்கள். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற அருந்ததியர்களுக்கு ஒரு தனித்த வரலாறு இருக்க வாய்ப்பில்லை எனக் கருதுவது தவறான

கருத்தியல் ஆகும். அனைத்து மக்களும் ஒரு இனக்குழுவிலிருந்துதான் தோற்றம் பெற்றனர். ஒவ்வொரு கூட்டத்திற்கென்று ஒரு தலைவன், அத்தலைவனின் ஆளுகைக்கு உட்பட்ட நிலம்(நாடு) இருந்திருக்கும் என்ற கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அருந்ததியர்கள் "நம்மோடு போட்டிப்போடும் அளவிற்கு உயர்ந்தவர்கள் அல்லர்" எனச் சிந்திப்பது பார்ப்பனிய பாசிசத்தின் வடிவம். அருந்ததியர்கள் மனுதர்மம், நால்வருணக் கோட்பாடு ஆகியவற்றிற்கு எதிராக சாதியை ஏற்காதவர்கள். புத்த மதத்தினை ஏற்றதனால் இவர்கள் சாக்கியர் எனப்பட்டனர். இதனாலேயே சமூகத்தின் கடைநிலைக்குத் தள்ளப்பட்டனர் என்ற கருத்தியலும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

*அருந்ததியர்கள் பெயர் விளக்கம்:*

*1921-ஆம் ஆண்டில் மாஅதியர், சக்கிலியர், மாதிகா, தோட்டி, பகடை, செம்மான், கோசாங்கி ஆகிய பெயர்களுக்குப் பதிலாக "அருந்ததியர்" என்ற ஒரு சொல்லால் அழைத்திட வேண்டும் என சென்னை மாகாண ஆட்சி மன்றம் பதிவு செய்துள்ளது.[4] அருந்ததியர் என்னும் சொல்லை அருமை+அதியர் எனப் பிரித்துப்பொருள் கொள்ளலாம். பண்புப்பெயர் குறித்து வரும் இடிகுறிப்பெயர் என எழில்.இளங்கோவன் கூறுகிறார். அதியர் என்ற சொல்லுடன் மா என்னும் உரிச்சொல் இணைகிறபோது மாதியர் என ஆகிறது. நிலைமொழியில் ஓரெழுத்து ஒரு மொழி வந்து, வரும் மொழியில் க,ச,த,ப எனும் வல்லெழுத்து வந்தால் இனமான வல்லெழுத்து ஒற்றெடுக்கும் என்னும் இலக்கண விதியின் படியும், உயிரும் உயிரும் புணராது, அதனை உடன்படுத்த உயிர்மெய் எழுத்துத் தோன்றும் என்னும் விதியின் படி, மா+அதியர்="மாத்தியர்" என்றாகி, அதுவே "மாதியர்" என்னும் சொல்லாக மருவி, வழக்காக நிலைத்து நின்று விட்டது.*

*அதியர்கள் பற்றி சங்க இலக்கியங்கள் தரும் சான்றுகள்*

வல்லான் வகுத்ததே சட்டம் என்ற வழக்கிற்கேற்ப, இந்தியாவின் வரலாறும், தமிழகத்தின் வரலாறும் பார்ப்பனர்களால் சித்தரிக்கப்பட்டவை. இன்னும் சரிவர உண்மையான வகையில் உரைக்கப்படாமல் இருப்பது வரலாற்று இருட்டடிப்பு எனத் திராவிடச் சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். சதுர்வருணக்கோட்பாட்டில் முதன்மைபெற்ற சாதியினர், கல்வி அறிவினைப் பெற்றதினால் வரலாற்றினைத் தனதாக்கி கொண்டனர். இவர்கள் கூறியதே வரலாறாக மாறிப்போனது. விளிம்பு நிலை சமூகங்களின் வரலாறுகள் ஏட்டில் இடம் பெறவில்லை என்பது வேதனைக்குரியதாகும். அந்த வகையில் அருந்ததியர்களின் வரலாறும் பிறரால் புறக்கணிக்கப்பட்ட வரலாறாகவே இருக்கிறது.

*பறம்பர்களே சக்கிலியர்கள்*

தேவநேயப்பாவாணர் "பறம்பர்" என்போரே சக்கிலியர் என்கிறார்.[5] பறம்பர்கள் பறம்புமலையை ஆண்டவர்கள். பறம்புமலை "திருக்கொடுங்குன்றம்" எனவும் வழங்கப்பட்டு வந்துள்ளது. இந்த மலையை ஆண்டவன் பாரி வள்ளல் என்ற குறுநில மன்னன். பறம்பு மலை மிகுந்த வளம் கொண்டதாக இருந்துள்ளது என்பதை சங்க காலப் புலவர் கபிலர் பதிவு செய்து காட்டுகிறார். "வேம்பின் பைங்காய் என்தோழி தரினே, தேம்பூங் கட்டி என்றனீர் இனியே, பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்....."(குறுந்தொகை-196) என மிளைக்கந்தனார் என்னும் சங்கப் புலவர் பாடிய பாடலின் மூலமாகப் பறம்பு மலையின் வளத்தை உணரலாம். சேர,சோழ,பாண்டியர்கள் என மூவரும் ஒருங்கே சேர்ந்து எதிர்த்தபோதும், அவர்களால் வெற்றி கொள்ள முடியாத மலை பறம்புமலை என்றும், அதனை ஆட்சிபுரிபவன் பாரி என்றும் சங்கப்பாடல் கூறுகிறது. இதன் அடிப்படையில் தேவநேயப்பாவாணர் பறம்பர்களைச் சக்கிலியர்கள் என்றார். இந்தப் பறம்பர்களே அதியர் எனவும், பகடை, மாதாரி, செம்மான், செக்குலியன் போன்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டும் வந்துள்ளனர்.

*தகடூர் அதியன் வழி வந்தவர்கள் அருந்தியர்கள்*

அருந்ததியர்கள் எனப்படுபவர்கள் தகடூரை ஆண்ட அதியமான் வழி வந்தவர்கள் என எழில்.இளங்கோவன் கூறுகிறார். அதிகன், அதியன், அதிகமான், சத்தியபுத்திரன், அதியமான் அஞ்சி, அதியமான்கோமான், அதியமான் எழினி போன்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டவன்தான் அதியமான். ஔவைக்கு நெல்லிக்கனியை ஈந்தவன். கரும்புப்

*பயிரைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவன். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். தகடூர் என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட குறுநில மன்னனே அதிகன். இன்றுள்ள தருமபுரி என்பதின் பழைய பெயரே தகடூர் என்பதாகும். இன்றும் தருமபுரியில் அதியமான் கோட்டை உள்ளது. இந்த அதியன் என்பவன் சேரர் குலத்தின் ஒரு கிளைக்குடி என புறநானூறு-99ஆம் பாடல் சான்றுரைக்கிறது. "விடுகாதழகிய பெருமாள்" என்பவன் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தத் தகடூரை ஆண்ட அதியர் குலத்தைச் சார்ந்தவர் என தொல்லியர் அறிஞர் இரா.மதிவாணன் சான்று தருகிறார். இவனை இராசராசஅதியமான் எனக் கல்வெட்டு சான்றுரைக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்து கல்வெட்டு ஒன்று "அதியமான் பெருவழி" எனக் குறித்துக்காட்டுகிறது. இன்றும் தருமபுரி பகுதியில் அடர்த்தியாக அதியர் குலம் எனச் சொல்லப்படும் அருந்ததியர்கள் வாழ்ந்து வருவதை இதற்கு முதன்மைச் சான்றாகக் கூறலாம். கிருஷ்ணகிரி மாவட்ட முழுவனப்பள்ளியில் கிடைத்த கல்வெட்டில் "விடுகாதழகிய பெருமாள்" என்ற பெயர் இடம் பெற்றுள்ளது. சித்தூர் மாவட்டம் லட்டிகம் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டிலும் "விடுகாதழகிய பெருமாள்" என்ற பெயர் இடம் பெற்றுள்ளது. மாதியர் அல்லது அதியன் குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதே இந்தக் கல்வெட்டுகள் கூறும் செய்திகளாகும்.*

*"துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று இந்நான்கல்லது குடியும் இல்லை"எனப் புறநானூறு-334 கூறுகிறது. இதில் துடியன் என்பது மாதியர்கள் குறித்த சொல்லாகும் என எழில்.இளங்கோவன் கூறுகிறார். "துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த"புறம்-369, "துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீர்"கலி-11-6, துடி என்னும் இசைக்கருவியைக் குறிப்பிடும் இப்பாடல் அடிகள் செம்மான் என்ற இனக்குழுவினரைக் குறித்துக்காட்டுகிறது. "தொடுதோல் அடியர் துடி பட குழீஇக்.."(பட்டினப்பாலை-265) எனப் பட்டினப்பாலையில் குறிப்பிடும் தொடுதோல் அடியர் வேடர்களாக சுற்றித்திரியும் மாந்தர்களாக இருந்தனர் என்பதைப் பதிவு செய்துகாட்டுகிறது. புறநானூறு, திருக்குறள், ஐங்குறுநூறு, கலித்தொகை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களில் தோல் தொழில் செய்யும் துன்னர்களாக, செம்மான்களாக அருந்ததியர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர். பல்வேறு பெயர்களில் வாழ்ந்து வந்த இனக்குழுக்களின் ஒன்றிணைப்பே மாதியர் என்ற சொல் என மார்க்ஸ் என்பவர் பதிவு செய்து காட்டுகிறார். அதேபோல் "அதியன் விண்ணத்தனார்" என்ற சங்க காலத்துப் புலவரும் இந்த அதியர் குலத்தைச் சார்ந்தவராக இருந்துள்ளார் என்பதைப் புறநானூறின் வழியே அறியமுடிகிறது.*

*எனவே அதியர் என்போர் சங்க காலந்தொட்டே போர்த்தொழில், தோல்தொழில், ஏர்த்தொழில் செய்து வந்தவர்களாக, சிறு, குறு நிலங்களின் தலைவர்களாகவும், அவர்களின் வழி வந்தவர்களாகவும் இருந்தனர் என்பதையும் இதன்மூலம் அறுதியிட்டு நம்மால் கூறமுடியும்.*

*புறப்பொருள் வெண்பாமாலை தரும் சான்று*

*"பைங்கட்பணைத்தாட் பகட்டுழவன்" எனப் புறப்பொருள் வெண்பாமாலை உழவுத்தொழிலில் ஈடுபடுபவர்களைப் பகட்டுழவன் என அழைத்து மகிழ்கிறது. பகட்டுழவன் என்பது பகடை என்ற இனக்குழுவினரைக் குறித்து வரும் பெயரச்சொல்லாகும்.*

*சிலப்பதிகாரம் தரும் செய்தி : செம்மான், பறம்பர் என்போர் அருந்ததியர்*

*ஆர்.கே.முகர்ஜி "இந்தியக் கப்பல்கள்" என்ற நூலை மேற்கோளாகக் காட்டி "மருவூர்ப்பாக்கத்தில். சுங்க வரி செலுத்தப்பட்ட பின்னர், சரக்குகள் மீது புலிச்சின்னம் பதிக்கப்பட்டுப் பண்டக சாலைக்கு அனுப்பப்பட்டன. அதற்கு அருகில் யவன வணிகர்களின் குடியேற்றங்கள் அமைந்திருந்தன. அங்கே கொல்லர்கள், தச்சர்கள், ஓவியர்கள், சிற்பிகள், பொற்கொல்லர்கள், செம்மான்கள் என அனைவரும் மருவூர்ப்பாக்கத்தையே உறைவிடமாகக் கொண்டிருந்தனர்" என சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பட்ட செய்தியினை டாக்டர்.அம்பேத்கர் பதிவு செய்து காட்டுகிறார். (தமிழில் நூல் தொகுதி-23). அம்பேத்கர் குறிப்பிடும் செம்மான்கள் அருந்ததியர்களே.*

*சிலப்பதிகாரத்தில், இந்திரவிழவு ஊர்எடுத்த காதையில் 32-ஆம் வரியில், "தோலின் துன்னர்" என்ற சொல்லை இளங்கோ அடிகள் பயன்படுத்துகிறார். 10-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த அரும்பத உரைகாரர் "தோலின் துன்னர்" என்பதற்கு "செம்மான்" எனக் கூறுகிறார். 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அடியார்க்கு நல்லார் "தோலின் துன்னர்" என்பதற்கு "பறம்பர்" எனப் பொருள் கூறுகிறார். பறம்பர்கள் என்போர் சக்கிலியர்கள் என தேவநேயப்பாவாணர் கூறுகிறார்.*

எனவே தோலின் துன்னர், செம்மான், பறம்பர் ஆகிய சொற்கள் அருந்ததியர் குறித்து வரும் சொற்கள் என்பது நிருபனமாகிறது.

சக்கிலியர் என்ற சொல்லின் பொருள்

"மாட்டிற்குப் பதில் வாணிப செட்டிகள் பலர் தங்கள் வீட்டினுள் எண்ணெய் எடுப்பதற்குச் செக்கு வைத்திருந்தனர். அந்தச் செக்கினைச் சுற்றுவதற்கு அல்லது ஆட்டுவதற்கு மனிதர்களைப் பயன்படுத்தினார்கள். மாட்டைப் பயன்படுத்தியது அதற்குப் பின்பு வந்த காலத்தில்தான். அவ்வாறு செக்கிழுத்த அந்த மக்களை அழைத்த முறைதான் செக்குலி என்தாகும். இதுவே பின்னாளில் சக்கிலி என மாறியது. இதனை இசையாயிரம் என்ற நூல பதிவு செய்து காட்டுகிறது.

பகடைகள் என்னும் இனக்குழுவினர் பற்றிய செய்திகள்

பகடு என்றால் காளைமாடு என்ற பொருள். மாடு போல வேலைகளைச் செய்வதால் அவர்கள் பகடர்கள் எனப்பட்டனர். இப்பெயரே மருவி பகடை என்றாகியது. இதனைத் திருக்குறளும் "மடுத்தவா யெல்லாம் பகட்டன்னான் உள்ள இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து" எனப் பதிவு செய்துகாட்டுகிறது. துன்பம் வரும்போது இந்தப் பகடர்களைப்போல் நாமும் உழைக்க வேண்டும் என்கிறார். பகடர்கள் என்போர் உழவர்களாக, உழைக்கும் மக்களாக இருந்துள்ளதைத் திருவள்ளுவர் இவ்வாறு பதிவு செய்து காட்டுகிறார். சங்கிலி போட்டு கட்டிவைக்கப்பட்டவர்கள். அல்லது சங்கிலி போட்டு அடிமைப்படுத்தப்பட்டவர்கள் என்பதினால் சங்கிலி என்ற சொல் மருவி சக்கிலி என மாறியது. சே என்றால் காளை என்று பொருள். சே+காளை=சேக்காளை என்பதின் திரிபுச் சொல்லே செக்காளை. காளைகளைப் பராமரிப்பவர்களே சேக்களைகள். மருவிய சொல்லே சக்கிளிகள்.

பகடை என்போர் போர் வீரர்கள். போரில் முன் வரிசையில் நிற்பவர்கள் என பிங்கல நிகண்டுகள் பதிவு செய்து காட்டுகிறது. "பகடுபுறந்தருநர் பாரம் ஓம்பி..."(புறம்-35) "பகட்டினானும் மாவினானும்"(தொல்-பொ-76), "பகடுதெழி தெள்விளி"(அகநானூறு-17), "பெருமை பகட்டா வீன்றகொடுநடைக்குழி"(பெரும்பாண்-243), "பரப்பு பகட்டெழின் மார்பின்"(புறம்-13), "வலிமை நுண்பூணம்பகட்டு மார்பின்"(புறம்-88), "பைங்கட்பணைத்தாட் பகட்டுழவன்"(புறப்பொருள் வெண்பாமாலை), "பகட்டினொடித்து"(தக்கயாகப்பரணி), "மடுத்தவாய் எல்லாம் பகடன்னான்.."(குறள்-624) "பகடு மருங்கு ஒற்றியும்.."(சிந்தாமணி) இவையனைத்தும் பகடை என்னும் இனக்குழுவினர்களைக் குறித்து வரும் சொற்களாகும்.

சாளுக்கியர் என்ற சொல்லைச் சக்கிலி என்ற சொல்லோடு ஒப்பிட்டுக் காட்டலாம். மேலும் சாக்கியா என்ற சொல்லின் மருஉ சொல்லே சக்கிலி என்பதாகும் என எழுத்தாளர் மதிவண்ணன் என்பவர் கூறுகிறார். சங்கிலி-சக்கிலி, ஒக்கிலி-சக்கிலி, சாளுக்கியா-சக்கிளியா, சாக்கியா-சக்கிலியா, செக்கிழு-செக்கிழு, செக்குலி-சக்கிலி, போன்றவற்றை மொழியியல் தன்மையோடு ஒப்பீட்டு பார்த்தால் சக்கிலி என்ற சொல்லின் உண்மை புரியும்.

நிகண்டுகள் தரும் விளக்கம்

"மாகதர்" போன்ற பெயர் பழங்காலத்தொட்டே தமிழகத்தில் வழக்கில் உள்ள பெயராகும். இந்தப் பெயரினைத் திவாகர நிகண்டு, செய்யுள்-49,51,54 குறிப்பிடுகிறது. இது அருந்ததியர் குறித்த சொல்லாகும். மாதாரி, மாதிகா போன்ற பெயர்களைக் குறிக்கும் உரிச்சொல் "மதங்கி" என்பதாகும். மதங்கி என்றால் பாண்மகள் என்று பொருள் எனத் திவாகர நிகண்டு செய்யுள்-127-ல் குறிப்பிடுகிறது. இது மாதங்கி என்ற பெண் தெய்வத்தின் பெயர். இந்த மாதங்கியை வணங்குபவர்களே மாதிகர்கள். இதனைத் திவாகர நிகண்டும் செய்யுள்-107-லிலும் காணமுடிகிறது. அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் "....வாயகி, மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி...ஆயகி ஆதி உடையாள் சரணம் நமக்கே"(பாடல்-50) எனப் பாடுவதில், "மாதங்கி" என்ற பெண் தெய்வத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இந்த மாதங்கியைக் குல தெய்வமாக வணங்குபவர்களே "மாதங்கி" என்போர்.[6]

"மாகதர்" என்ற சொல்லாடலைக் கலிங்கத்துப்பரணி-காளிக்கு கூளி கூறியதில் காணமுடிகிறது. (பாடல் வரி-333) இந்தக் கலிங்கத்துப்பரணி "மாகதர்" என்போர் சிற்றரசர் எனக் குறித்துக்காட்டுகிறது. ஆகவே மாதகர் என்போர் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் வாழ்ந்து வரும் தொல்பழங்குடியைச் சார்ந்தவர் என்பது நிருபனமாகிறது. இந்த மாகதர் என்ற பெயரே

மருவி மாஅதிரர் எனவும், மாதியர் எனவும் திரிந்தது. மள்ளர்-பள்ளர், கோசர்-கோளர், புறநகர்-நகர்ப்புறம், இல்முன்-முன்றில், மருதை-மதுரை போன்ற திரிபு பெயர்களோடு இதனை ஒப்பிட்டுக் காட்டலாம்.

சேந்தன் திவாகர நிகண்டு, தெய்வப்பெயர்த்தொகுதியில் காளியின் பெயரைக்குறிப்பிடும் போது "மாதரிவீரி" என்னும் பெயரினைச் சுட்டுகிறது. மாதிரி என்னும் பெண் தெய்வத்தை வணங்குபவர்களே "மாதரிகள்" எனப்பட்டனர். 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிங்கல நிகண்டு-நூற்பா எண்-114-இல் மாகாளி என்னும் பெண் தெய்வத்தின் பெயரினைக் "குமரி,சண்டிகை, குண்டலி, நீலி, வலவை,பைரவி, கௌமாரி, மாதரி, மாயை வீரி மதங்கி யாமளை ..." எனக் கூறுவதில், மாதரி என்னும் பெயர் மாதாரி என்பதோடு தொடர்புடையதாகும் என அறிதியிட்டுக் கூறலாம்.

அகராதி நிகண்டு பக்-71-ல் "செம்மான்" எனக் குறித்துக்காட்டும் பெயர் அருந்ததியர் இனத்தின் வேறொரு பெயர் எனலாம். "செம்மான் மகளைத் திருடும் திருடன்"(கந்தர் அநுபூதி) மானின் தோலினை அணிந்தவனின் மகளைத்திருடியவன் என்று அருணகிரிநாதர் பாடும் இப்பாடலில் மான் தோல் உரித்து, பதப்படுத்தும் பண்டை கால வேட்டைச்சமூக மக்களின் வாழ்வியலைக் கூறுகிறார். தொன்மைச் சமூகத்தின் தொடர்ச்சியே தோல் ஆடைகள் செய்பவர்கள். இவர்களே செம்மான்கள் ஆவர். அதியர் என்ற சொல்லைத் திவாகர நிகண்டு, செய்யுள்-61-ல் காண முடிகிறது. இது அருந்ததியர் குறித்த பெயர்ச்சொல் ஆகும். பகடை (பகடு+ஐ= பகடை) என்றால் காளை மாடு, எருமை மாடு என்று பொருள். மாடு, காளை, எருமை, யானை போன்றவற்றை வளர்ப்பவர்கள், அதனைக் காட்டிலிருந்து பிடித்து வந்து பழக்கியவர்களாக இருந்ததினால் அவர்கள் பகடைகள் என அழைக்கப்பட்டனர். பகடைகள் என்றால் போர் வீரர்கள் என்றும் பொருள். தொழுவர் என்போர் சூத்திரர், தோல் வேலை செய்வோர் என அகராதி நிகண்டு கூறுகிறது. தொழுவர் என்ற சொல்லாடல் சங்க இலக்கியங்களில் விரவிக் காணப்படுவதாக புலவர் கா.கோவிந்தன் "தமிழர் வரலாறு" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.[7] எனவே பகடை, செம்மான், துன்னர், பறம்பர், சக்கிலி போன்ற பெயர்களைப் பல்வேறு நிலைகளில் ஒப்பிட்டுக் காட்டலாம்.

காஞ்சி காமாட்சி செப்பேடு-ஆண்டு-1301 தரும் செய்தி

விழுப்புரம் மாவட்டம், அய்யூர் அகரம், காஞ்சி காமாட்சி செப்பேடு-ஆண்டு-1301, "தேவேந்திரன், பள்ளன், குடும்பன், காலாடி, பன்னாடி அனைவரும் ஒருவரே எனவரும் செப்புப்பட்டையத்தில், "விருது பெற்ற கோசங்கி பகடைகள் விருது கோசங்கிகளில் தெய்வச் சம்மாளி பெற்றவன், சீர்பாதங்கொண்டு செய்தவன், மாதங்கி வரங்கொண்டவன், தென்னை மரத்தில் பிறந்த செய்வீர செனனன், நன்மையாய் பிறந்த நல்ல கோசங்கி, அர்த்த நாரி புலி தோலும், நரசல்லி விருதுக்குரியவன், வச்சிரகாயம் பெற்றவன், மாதாரி செனனன் வங்கிசத்தான், திருமேனி பெற்றவன் கையிலாத காந்தித்தான் ஆசாளை பிள்ளைக்கு சம்மந்தியானவன், அதிக பலம் பெற்றவன், விருது கோசங்கிகளில் இலுப்பூர் வீரபகடையும், வேலூர் நாகபகடையும், காஞ்சிபுரம் சித்ரக்கல் ஒவன், கொங்கு தாராபுரம் திம்மப்பகடை, அரியலூர் மணிப்பகடை, காமாட்சி அம்மன் ஏகாம்பர நாதர் திருவிழா முதலானவர்களும் கூடி காஞ்சிபுரத்திலே கங்கை கொண்டான் வீதியிலே மண்டபத்திலே வந்து கூடினார்கள்..." என வரும் இந்தச் செப்புப்பட்டையத்தில் மொத்தம் 107 வரிகளில் உள்ளன. இந்தச் செப்புப் பட்டையத்தில் பகடை என்ற சொல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதேபோல் பகடைகள் அல்லது மாதாரிகள் என்போர் கோசங்கி என அழைக்கப்பட்டு வந்துள்ளனர் என்ற வழக்கத்தினையும் இதன் வழியே காணமுடிகிறது. பகடைகள் சிவன்கோவிலில் முதல்மரியாதையைப் பெற்றவர்கள் போன்ற செய்திகளை இந்தச் செப்புப்பட்டையம் கூறுகிறது.

சக்கிலியர்கள் பற்றி செயங்கொண்டாரின் இசையாயிரம்

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (1070-1118) வாழ்ந்த, செயங்கொண்டார் வாணிக செட்டிகளின்மீது பாடிய நூறு பாடல்கள் கொண்ட ஒரு இசை நூல் "இசையாயிரம்" என்னும் நூல் ஆகும். இது இன்று காணக்கிடைக்கவில்லை என மு.இராகவையங்கார்-1925-இல் கலிங்கத்துப்பரணியாராய்ச்சி என்னும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[8] "ஆடுவதும் செக்கே அளப்பதுவும் எண்ணெய்யே..கூடுவதும் சக்கிலியக் கோதையே-நீடு புகழ், காஞ்சிப்

செப்பேட்டில் கணிக்குங்கால் செக்கார் தாம் உச்சிக்குப் பின்புகார் ஊர்'' என செயங்கொண்டார் பாடியுள்ளதில், செட்டிகள் செக்கில் இருந்து ஆட்டி எடுத்த எண்ணெய்யைச் சக்கிலியர்களால் செய்து தரப்பட்ட உரையில் அதாவது தோல் உறையில் ஊற்றி அதை பல்வேறு நாடுகளுக்கு, ஊர்களுக்கு எடுத்துச்செல்வர் எனக் கூறுகிறது. இதனைக் குறிப்பிடவே ''சக்கிலியக்கோதை'' என்ற சொல்லாடலை செயங்கொண்டார் பயன்படுத்தியுள்ளார். எனவே இதன் மூலம் சக்கிலியர் என்போர் செய்த எண்ணெய் ஊற்றி வைக்கும் தோல் பை தீட்டுக்குட்பட்டது அல்ல என்பது தெரிய வருகிறது. காரணம் சக்கிலியர் என்போர் தச்சர் போல, கொல்லர் போல, செட்டிகள் போல தோல் தொழில் செய்து வந்த ஒரு இனக்குழு சமூகத்தவர் என்பது புலனாகிறது.

*சக்கிலியர்கள் குறித்த தவறான பதிவுகள்*

அருந்ததியர்கள் என்போர் தெலுங்கு மொழி பேசும் மக்கள். மலம் அள்ளுபவர்கள். பாதாளச் சாக்கடைகளைச் சுத்தம் செய்பவர்கள் என நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை அதுவல்ல. இம்மாதிரியான வேலைகள் இவ்வின மக்களின் மீது கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ளது. ''சக்கிலியர்'' அல்லது ''அதியர்'' அல்லது ''மாதியர்'' என்போர் செக்கு இழுத்து எண்ணெய் எடுக்கும் தொழிலில் ஈடுப்பட்டிருந்தனர் என்பது புலனாகிறது. ஆனால் எட்கார் தர்ட்சன் தன்னுடைய நூலில் வடமொழியில் வேறொன்றாகப் பதிவு செய்து காட்டுகிறார். ஹிந்தி அல்லது சமஸ்கிருதத்தில் சக்கிலி என்றே சொல்லே இல்லை. பின்பு ஏன் எட்கார் தர்ட்சன் சக்கிலி என்ற சொல்லைப் பயன்படுத்தினார். எட்கார் தர்ட்சனுக்குத் தமிழ் தெரியாது. தமிழ் தெரிந்த ஒரு பிராமணர் கூறியதை அவ்வாறே பதிவும் செய்து விட்டார்.

*அருந்ததியர்களின் வழிபாடுகளும், நம்பிக்கைகளும்*

''மாயோன் மேய காடுறை உலகம்'' எனத் தொல்காப்பியம் கூறும் திருமால், இத்தெய்வத்தையே தங்களின் முழுமுதல், முதன்மைக் கடவுளாக வணங்கி வருகின்றனர். சேயோன் ஆகிய குறிஞ்சி நிலக் கடவுளையும், வெற்றியைப் பெற்றுத்தரும் கொற்றவையையும், சிவபெருமானையும் வணங்குபவர்களாக அருந்ததியர்கள் உள்ளனர். பெரும்பான்மையாக மாடுகள், எருமைகள், ஆடுகள் போன்ற கால்நடைகளைச் சிறிய அளிவில் வளர்த்து வாழ்ந்து வரும் சிறுகுடியினர். தமிழகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருபவர்கள். மாடுகளை மேய்ப்பவர்கள். மாட்டிறைச்சி உண்பவர்கள். போர்த்தொழிலில் சிறந்தவர்கள். முரச மாதியர் என்ற ஒரு உட்பிரிவின் பெயரின் வழியாக இவர்கள் பறை இசைத்து, ஆடும் கலையில் வல்லவர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். செத்த மாட்டினைச் சாப்பிடுவதாலேயே நீங்கள் பிற சாதி இந்துகளால் ஒடுக்கப்படுகிறீர்கள் என டாக்டர்.அம்பேத்கார் பதிவு செய்து காட்டுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

*அருந்ததியர்களின் திருமண முறை*

ஐந்திணை முறையில் அமைந்த களவு வாழ்க்கையை முழுமையாகக் கடைபிடிக்கும் இனக்குழுவினர். எண்வகை மணங்களுள் கந்தர்வ மனமே அருந்ததியர்களின் கடை பிடிக்கும் மணம். ஊழ் கூட்டுவிக்க ஒப்பாரும் மிக்காரும் அற்ற தலைவனும் தலைவியும் சந்தித்துக் காதல் கொண்டு தொடரும் களவு வாழ்க்கையைச் சங்க காலம் தொட்டு இன்று வரையில் கடைபிடிப்பவர்களாக உள்ளனர். களவு என்பது ஊழ் வினையின் காரணமாய்த் தலைவன் தலைவி இருவரும் ஒத்த அன்பினராதலாகும் என்ற விதிகள் இவர்களின் வாழ்க்கைக்குப் பொருந்தும். இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம், பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாதல், மணஅறிவிப்பு, உடன்போக்கு போன்ற களவு வாழ்க்கைக்குரிய அனைத்தையும் கடைபிடிக்கும் இனக்குழுவினராக வாழ்ந்து வந்தனர், வருகின்றனர். பெற்றோர்களால் முடித்து வைக்கப்படும் கற்பு வாழ்க்கையிலும் மணவாழ்வை ஏற்படுத்திக்கொள்கின்றனர். சாதி இவர்களுக்கு தடையில்லை என்ற நிலையில் அன்றும் இன்றும் மாறாமல் வாழ்பவர்கள். இவ்வாறு வாழ்தல் என்பது தமிழரின் தனி அடையாளம் எனலாம்.

*அருந்ததியர்களின் பண்பாட்டு விழுமியங்கள்*

வேட்டையாடுவதில் கிடைக்கும் வேட்டைப்பொருள்கள், போர்களில் கவர்ந்து வரும் பொருட்கள் ஆகியவற்றை அரசன் முன்னிலையில் ''பாதீடு'' முறையில் பங்கிட்டுக்கொள்ளும்

பண்டை தமிழ்ச்சமூகத்தவர்கள். உற்றார் உறவினர்களை மதிக்கக் கூடியவர்கள். அருந்ததியர்கள் சாதி பார்க்காத, தீட்டு பார்க்காத தூய தமிழர்கள். யாரேனும் தங்களிடத்தில் தஞ்சம் கேட்டால் சாதி, தீட்டு பார்க்காமல் மிகவிரைவில் உதவும் உள்ளம் கொண்டவர்கள். சாதி பார்க்காமல் திருமண உறவை மேற்கொள்பவர்கள். சாதியத் தீட்டுகளுக்குக் கட்டுப்படாதவர்கள். துணிச்சல் மிக்கவர்கள். உயிரைத் துச்சமாக நினைப்பவர்கள். பிறருக்கு உதவுவதில், பிறருக்கு சேவை ஆற்றுவதில், உழைப்பதில் முதலிடத்தில் இருப்பவர்கள். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் பொன் மொழிகளை முழுமையாகக் கடைபிடிக்கும் உண்மைத் தமிழர்கள்.

சங்க இலக்கியத்தில் தொழுவர், இழிசனர், புலையர், வெட்டியான் போன்ற சொற்கள் அதிக அளவில் பயின்று வருவதைக்கொண்டு, இச்சொற்கள் யாவும் சாதிப்பெயர் குறிப்பிடப்படாத அருந்ததியர் இனத்தைக் குறிப்பதாக இனவரைவியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சுதந்திர போராட்டப் போரில் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டு நம் தாய்நாட்டின் வெற்றிக்குத் துணை நின்றவர்கள். நீதிக்கும், நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள். காவல் தொழிலில் வல்லவர்கள். மதுரை வீரன் கதைப்பாடல் சான்றுரைக்கிறது. திருட்டுத்தொழிலில் ஈடுபடாதவர்கள். "பணிவுடையவன் இன்சொலன் ஆதல் ஒருவருக்கு அணியல்ல மற்றுப் பிற" (குறள்-95) என்னும் திருக்குறளுக்கு ஏற்ப வாழ்பவர்கள். "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல அரசு" (குறள்-385) என்பதற்கிணங்க அரச கட்டளைகளை நிறைவேற்றுபவர்கள். நல்ல பக்தி மார்க்கத்தில் இருப்பவர்கள். பெரியபுராணத்தில் இடம் பெறும் சிறுதொண்ட நாயனார் மாதியர் குலத்தைச் சார்ந்தவர் என சேக்கிழார் கூறுகிறார். சிவபெருமானே பிள்ளைக்கறிஅமுது வேண்டும் என்ற போது, தங்களின் குழந்தையைச் சமைத்து இறைவனுக்கு அமுது படைத்துத் தந்து சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற நிலையில் சாதி, தீட்டு, விலக்கு போன்ற பேதமைகளை நீக்கி அனைவரையும் சமமாகக் கருதி பிறரின் நன்மதிப்பைப் பெற்றுவாழும் உழைக்கும் சமூகத்தவர்களாக இருப்பவர்கள். தியாக மனப்பான்மை உடையவர்கள். சாதி இந்துக்களின் தீண்டாமையை ஏற்றுக்கொண்டு, தீட்டு விலங்குகளை ஏற்றுக்கொண்டு எதிர்க்காமல், தீண்டாமைத் தீட்டுகளைக் கண்டுகொள்ளாமல் வாழ்பவர்கள். திருமணத்திற்குச் சாதி தடையில்லை என்பதை முழுமையாகக் கடைபிடிப்பவர்கள். பிறர் தங்களை ஒடுக்குகின்றனர், இழிவு படுத்துகின்றனர், என்பதையெல்லாம் கண்டுகொள்ளாத இனக்குழு சமுதாயத்தினராகத் தங்களை தகவமைத்துக்கொண்டவர்கள். இவர்களைச் சாதியற்ற தமிழர்கள் என்பதில் வியப்பில்லை. அருந்ததியர்கள் யாரையும் கீழானவர்களாக நினைப்பதுமில்லை, ஒதுக்குவதுமில்லை.

நடுகல் வழிபாடும், இறப்பு சடங்குகளும்

இறந்து பட்ட முன்னோர்களை வணங்கும் வழக்கம் மிகத்தொன்மையானது. "குளவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும், வாளின் தப்பார்..." என்ற புறநானூற்றுப் பாடல் கூறுவதைப்போல இறந்தவர்கள் வீர சுவர்க்கம் அடைய வேண்டும் என்பதற்காக இறந்தவர்களின் மார்பில் வாளால் கீறி, பின்பு புதைக்கும் வழக்கத்தை உடையவர்கள். சங்க காலத்தமிழர்களின் வாழ்வியலின் மிக முக்கியமாகக் கருதப்படுவது, இறந்தவர்களை எரியூட்ட மாட்டார்கள். மாறாக புதைப்பார்கள். அருந்ததியர்களும் புதைக்கும் வழக்கத்தினைப் பெற்றுள்ளனர். இறந்தவர்களின் நினைவாக "நடுகல்" நட்டு ஆண்டுக்கு ஒரு முறை படையிலிட்டுத் தங்கள் முன்னோர்களை நினைத்து வழிபாடு செய்யும் பண்பாட்டினைக் கொண்டவர்கள். எருது பொருதார் கல் என்ற ஒரு தன்மையானது, அரசன் வெற்றி பெற்றவுடன் வேண்டுதலை நிறைவேற்ற உடம்பில் கை, கால், என 9 இடங்களில் வெட்டி தங்களது உயிரை பலி கொடுக்கும் வகையினை அகநானூறு பாடல்களின் வழியே காணமுடிகிறது. தங்களைத் தாங்களே பலியிடுபவர்கள் அதியர் என்னம் இனக்குழுவினர் என்பதை அகநானூறு-35 மற்றும் 67-ஆம் பாடல்கள் சான்றுரைக்கின்றன. மாஅதியர்களின் உட்பிரிவில் உள்ள உட்சாதிகளின் பெயர்கள் அனைத்தும் தமிழர்களின் தொன்மைப் பெயர்களாகும். மேலும் மாஅதியர்களின் வழிபாட்டில் பன்றிக்கத்திக்கல், குதிரைக்குத்திக்கல், யானைப்போர் நடுகல் போன்ற பெயர்கள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இறந்தவர்களைத் தென்னமரக்கிளைகளால் பிண்ணிக் கொண்டு தேர்

அமைத்து(பாடை) ஊர்வலமாகக் கொண்டு சென்ற, ஊர்ப்புறத்தில் அமைந்துள்ள சுடுகாட்டில் புதைப்பர். இத்தகைய வழக்கம் சங்ககாலம் தொட்டே இருந்துள்ளது. அரசனுக்கு கிடைக்க வேண்டிய மரியாதையை இறந்தவர்களுக்கும் வழங்கவேண்டும் என்ற மரபினைப் பெற்றிருப்பது தமிழர் பண்பாட்டின் தொன்மை எனலாம். இறந்தவர்களைப் புகழ்ந்து பாணர்கள் ஆடிப்பாடுவர். அவ்வாறு பாடும் மரபினர் அதியர் குடி மக்களேயாவர். மாதியன் கள் குடித்தால், பாட்டு நல்லாப் பாடுவான் என்ற வழக்கு இன்றும் உள்ளது. இறந்தவர்களின் வீடுகளில் இவர்களைப் பாடச்சொல்லி பிற சமூகத்தவர்கள் விரும்பிக் கேட்டுக்கொள்வதை இன்றும் கிராமப்புறங்களில் காணமுடிகிறது.

முடிவுரை

இனவரைவியல் கோட்பாடுகளோடு ஒப்பிட்டும், வரலாற்று அடிப்படையிலும் அருந்ததியர்கள் தொன்மைத்தமிழர் என்பதையும், கல்வெட்டுச்சான்றுகள், இலக்கியச்சான்றுகள், செப்புப்படையச் சான்றுகள், வெளிநாட்டவர் குறிப்புகள், நாட்குறிப்புகள் போன்றவற்றின் வழியே மாதியர்கள் நன்மதிப்பு பெற்றிருந்த தொல்குடியினர் என்பதும், தொல்தமிழர் என்பதும் இங்கு முன் வைக்கப்பட்டுள்ளது. ”எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு” என்பதற்கேற்ப, அறிவியல் முறையிலான ஆய்வதாரங்கள் இங்கு முன்வைக்கப்பட்டு மாதியர்கள் என்போர் பறம்பர்கள், செம்மான்கள், பகடை, செக்குலி போன்ற பல பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளனர் என்பது புலனாகிறது. தற்காலத்தில் இவ்வின மக்கள் செய்து வரும் தொழிலைக்கொண்டு இவர்களுக்கு வரலாறு இல்லை எனக் கூறுவதும், வரலாறு இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்பதும் பொய்மை வாதம் ஆகும். இத்தகைய போக்குகள், கருத்தியல்கள் அறிவியலுக்கும் பெரியாரிய, அம்பேத்கரிய கொள்கைகளுக்கு எதிரானது. அதியர் குலத்தின் வீழ்ந்துபட்ட வரலாறு மீட்டுருவாக்கம் செய்வது என்பது காலத்தின் கட்டாயம் என “சக்கிலியர் வரலாறு”(2023) என்ற நூலில் எழுத்தாளர் மதிவண்ணன் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. எனவே அருந்ததியர் என்போரின் வரலாறு தோண்டத்தோண்ட கிடைக்கும் கீழடி ஆய்விற்கு ஒப்பானது எனக்கூறலாம். அருந்ததியர்களின் வரலாற்றைப் புறந்தள்ளுதல் என்பது, கீழடி ஆய்வை வடக்கத்தியர் புறந்தள்ளுவதற்கு ஒப்பானது.

அடிக்குறிப்புகள்

1. சீ.ஜே.ஜெயதேவன்,மு.இரகுபதி – பழங்காலமும் பழங்கால பண்பாடும், பக்கம்-3
2. புலவர் கா.கோவிந்தன்-காலந்தோறும் தமிழகம்
3. சாதியும் மதமும்-ஊரான் அடிகள், பக்கம்-61
4. எழில்.இளங்கோவன்-அருந்ததியர் வரலாறு- வினாவும் விடைகளும்-பக்கம்-3
5. தேவநேயப்பாவாணர்-தமிழர் வரலாறு
6. திவாகர நிகண்டு
7. புலவர் கா.கோவிந்தன்-காலந்தோறும் தமிழகம்
8. மு.இராகவையங்கார்-கலிங்கத்துப்பரணியாராச்சி-1925- பக்கம்-2

********* ********* ********** ********* ********* ********** ********** **********